உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம்

ஸ்தாப ஞசாரிய வரிய

ஸ்ரீமத்

குரு ஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச்செய்த

# சிவபோக சாரமும் சொக்கநாத வெண்பாவும்

ஸ்ரீலஸ்ரீ,

சுப்பிரமணிய தேசிக மகா சந்நிதானத்தின்

ஆக்ஞைப்படி

வித்வான், திருவாளர்

ப. மு. சோமசுந்தரப்பிள்ளை அவர்கள் M. A. L.T.

எழுதிய

## ஆங்கில மொழிபெயர்ப்புடன்

தருமபுரம் ஆதீன வித்வான்

ஸ்ரீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை

அவர்களால் பார்வையிடப்பட்டு

ஒடுக்கம் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளால்

சென்னை

இம்பீரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

*Copy Right*] *1932* [*500 Copies*

Printed at The Imperial Printing Works,
23, Davidson Street, Madras.

IN PRAISE OF

# SRI SUBRAHMANYA DESIKA SWAMIGAL.

---

Hail! O Dharmapura! the home of Gods
And sages where Virtue abides in Peace!
Where Wisdom, Service and Devotion thrive!
Ever shalt thou shine in glory, renown,
And be praised with pride as the best on earth;
Like Thy Holy Teacher's Right eye, the sun
Which sweeps the darkness in the lotus-hearts
Of Devotees true and kindles Siva's light;
Like his left eye, the moon that pours the cool
Nectar of Bhoga, in their crystal cups
And places the essence of wisdom in
Their reach and leads them on to Godliness.

BY PANDIT P. A. MUTHUTHANDAVAROYA PILLAI

*Pandit Dharmapura Adhinam.*

# FOREWORD

THE 'Saiva-Siddhanta' is the choicest product of the Dravidian intellect. It will be an interesting study to trace the evolution of this system of philosophy from its beginnings. It was in the middle of the twelfth century A.D., that its doctrines were formulated in Tamil in the shape of sutras and the Saiva-Siddhanta came to be recognised as a school of thought. Sri Meykanda-Deva, Sri Arulnandi Sivacharya and Sri Umapatisivacharya were the most prominent writers who have left behind them remarkable works in the field of Tamil Literature. Still theirs was no propaganda work. They revelled in high spiritual experience and the Tamil Sastras were but effusions of such experience and were merely calculated to establish their disciples in the path of wisdom.

After these came the founders of the Saiva Mutts. The founders of the Dharmapuram and Tiruvavaduturai mutts and their successors contributed in a very large measure to the practice and propagation of this system of philosophy among the masses by initiating fit men in the mysteries of Saivaism and making them disciples of the mutts, founding branch mutts all over Tamil land and placing them in charge of their ascetic disciples with a view to implant Saiva culture even in remote villages, expounding the Meykanda Sastras and writing or causing their disciples to write commentaries on them and recording their own spiritual experiences in excellent treatises.

One of the most important of such treatises is the Siva-Bhoga-Saram, the Essence of Blissful Experience, a small-sized book widely appreciated for its sublimity of thought, composed by Sri Jnanasambandha Swamigal, the distin-

guished founder of the Dharmapuram Mutt. The book has run through three editions; only one of them was described as authoritative, the editor having had access to the manuscript copies of the book in the Dharmapuram mutt library. A more authoritative edition is published now with the blessings of the present Head of the mutt, Sri La Sri Subrahmanya Desikar, well known for his warm interest in such kind of publication. The editor Vidvan P. M. Somasundaram Pillai M.A., L.T., has unearthed certain verses of the book found only in a manuscript work known as the Muttinichayapperurai, an elaborate commentary on a spiritual work and brought them to light. The edition contains, besides the carefully edited text, an excellent translation of the whole book. To some, the translation might appear superfluous, but a careful reader will easily discover what wealth of thought the verses conceal and he is apt to miss if he were to read them without the translation. I have no doubt that the present edition will appeal to a larger circle of readers and also pave the way for a demand being created for more books in this class of literature.

S. ANAVARATAVINAYAKAM PILLAI, M.A., L.T.,

Reader in Tamil

*Institute of Oriental Research,*

*University of Madras.*

Gopalapuram,
Madras,
1-10-30

# INTRODUCTION

THE work before us is a small one being avowedly an essence but like all true essences it is worth its weight in gold. Like similar books by realised souls that wanted to give their experiences for the guidance of mankind it is written in very simple style in easy 'venba' metre. The author has his thoughts most clearly in his mind, and as a consequence his expression is most transparent. As the thoughts are of the noblest experiences reflected in tranquility the diction comes to have the smooth steady sparkling flow of clear water over level plains. There is never any straining after effect. The words come most naturally ; it seems as if the author were intimately talking to you rather than sitting down and manufacturing verses. The result is that the great truths are couched in a language which is direct sincere and appealing. In spite of the severe simplicity, many of the verses are so bewitching in the flow of their rhythm, in the depth of their meaning, in the familiarity and pithiness of their words that they simply stick to your memory. Their music haunts your ears and you often find yourself humming them within you.

The subject dealt with in the book is Sivabhoga, the union of the soul with God: the realisation of the soul of its relation to the supreme spirit Sivam and the merging of its individuality in It. The experiences described are the author's own and they are in consonance with those of other Jeevanmuktas who have attained illumination along the path of Saiva Siddhanta Mysticism. The variety of religious experience which goes by the name of Siddhanta is based on love, manifesting itself as self-annulment on the part of the soul and grace on the part of God. In this system are postulated three eternal principles Pathi, Pasu and,

Pasam. The soul starts on its pilgrimage from its primitive kevala state in which, bound with anava-malam, it has been forgetful of its true nature and identifying itself with anava. Now the grace of God, Arul, begins to operate and endows the soul with certain means by which it can recognise its own self and its relation to anava on the one hand, and God on the other. This state is known as the Sakala state. When the soul becomes freed of this anava and unites itself with God it is said to have reached the Suddha or Nirmala state. The stages of experience through which the soul marches towards liberation are marked off into ten by the Siddhanta mystics and are named Dasa-Karyam, elaborately treated in many of their books. Stated briefly, they are as follows:— The soul becoming aware of the operations of Maya, Tattvarupam, realising that the tattvas are the outcome of the Maya and are inert matter, Tattvadarsanam, and being no longer influenced by the tattvas and knowing itself to be an entity different from them, Tattva suddhi, are the first three steps of spiritual experience. The next three steps are Atmarupam when the soul, freed from corruption, discovers that its form is intelligence, Atmadarsanam when it realises that it cannot act independently and Atmasuddhi when it effaces itself and becomes established in divine grace. To understand that Siva by his Gracious functions cleanses it of the malam and bestows salvation is Sivarupam, the seventh karyam. To understand its own limitations and perceive the divine wisdom which of its own accord bestows Grace is Sivadarsanam, the eighth karyam. The soul realising the 'omnitude' of Siva and setting itself in tune with Him without losing its individuality constitutes the ninth step, Siva yoga. The experience of the soul in which it merges its individuality in the Supreme Being is Sivabhoga. This is the tenth karyam. This last is the nirmala-turiya-

athitha stage described in the eleventh sutram of both Sivajnana Bodham and Sivajnana Siddhiyar. The same subject is dealt with as Paramananda in Tugal-aru-bodham. All these cardinal principles of the Nigamanta system are treated briefly in the present work in a way suggestive of a heart to heart talk rather than of a formal treatise.

Sivabhogasaram begins with obeisance to the Guru. At the outset the author gives an idea of the difficulties besetting the narrow path that leadeth to Sivabhoga and after stating some truths one that chooses this path has to bear in mind, he goes on to give his upadesa. Then the state of realisation is explained and the means of attaining this are told next. Foremost among these means is the cessation of the activity of the individual and that is treated in a section by itself. Renunciation of the ways of the world is insisted on in the following section. The wise are praised and the worldly pitied in the next two sections. The work concludes by giving some general advice.

The theme of this book has its natural sequel and conclusion in the author's 'Muktinischayam', a small work vindicating the Saiva Siddhanta experience of what Mukti or liberation is. There the author examines the idea of Mukti as propounded by the Atmananda-vadins, Siva samananda-vadins and others, and states his own convictions born of the illumination of his own life. He says that Sivabhoga is the merging in Bliss of the soul when the eternal darkness that clings to it has been dispelled by the grace of God (Mukti.15) and describes the Siddhanta Mukti as the condition of the soul, when, with its impurity removed, it experiences the swelling flood of Sivananda and becomes united with the Supreme (ibid.22). The author thus bears witness to the noble galaxy of Jeevanmuktas who have handed down the tradition of mystic experience through the path of Siddhanta.

Guru Jnanasambandhamurthi, the author of Sivabhogasaram was born of Vellala parents in Srivilliputhur of the Tinnevelly district. He lived in Madura for sometime when he composed two works, Sokkanatha Venba and Kalitthurai. Then he went to Tiruvarur and found his Guru in that great soul Jnanaprakas celebrated in the Sivabhogasaram. He wrote Jnanaprakasamalai in praise of the Guru. After initiation, he chose a beautiful site, Bilvaranya, or Dharmapura, on the southern bank of the Cauvery near Mayavaram and founded the Dharmapuram Mutt about 1400 A.D. He traced his spiritual descent from Srikantha, and followed the Saiva Siddhanta system that was in vogue in South India from very remote times.

The author carried on his activities and lived the life of spiritual realisation during the period of the great cultural revival which South India experienced under the Chola Kings. He was the contemporary of one Sri Rajaraja Chola Bhupathi. There was much circulation of ideas and migration of people in the Tamil land at that time. A good deal of leaven was at work. The times required synthesis and consolidation in religious as well as secular fields. This synthesis and consolidation has been the most prominent characteristic of Saivism in general and the Saiva Siddhanta in particular.

Inscriptions, temples and other archaeological remains, literary records and tradition tell us that there were many mutts of the Saiva, Vaishnava, Lakulesvara and Pasupata orders and other institutions for the spread of Vedic and Agamic doctrines in South India from very early times down to those of Kulotthunga III. Of these, the Saiva mutts were under the care of pontiffs, spiritual descendants of Durvasa, Agastya and others. Similarly, there were mutts at Sri Kailas and other centres in Northern India. These various

mutts had each its own traditions, rules of conduct and philosophical interpretations of the Vedagamas. In course of time, different sacrosanct categories of belief, liturgical and ritualistic manuals came into being. Schisms naturally arose. The Mutts fell roughly into the Advaita, Dvaita or Dvaitadvaita schools of thought. During the middle ages, many of the Agamantha mutts were probably absorbed into other denominations. These mutts may be said to be so many monasteries where the members of the brotherhood lived a life of celibacy and severe self-discipline dividing their time between devotion to God and service to humanity. Many of them were famed for their scholarship, saintliness and spiritual powers. Naturally, people around, including ruling princes, recognised the purity, austerity, and selflessness of the Munivars. They paid homage to them and endowed properties to perpetuate the institutions and teachings of which they were custodians. Often public institutions like the great temples of South India were committed to their care by the people. In this way the Mutts came to have great power and influence in the land.

Guru Jnanasambandha Swamigal established the above mentioned mutt at Dharmapuram and wrote Sivabhogasaram as a Compendium of doctrines designed primarily for the use of the members and adherents of this mutt. It had won so much sanctity and prominence even in those days that certain apostles were able to work miracles by merely chanting select verses from it.

A knowledge of the nature and extent of the works written in institutions of olden times like the mutts, fills one with admiration for the love that the people of those days had for their mother tongue; (and for the care which was bestowed by patrons of literature for its nurture). It shows how the hearts of the children of our Motherland were always

set on the Realisation of Truth. Above all, it gives us an idea of the noble love and fervent devotion with which the ancient religious institutions tended the flame of spiritual aspiration in this Punya Bhumi of ours.

In the preparation of this work, besides closely following the manuscripts belonging to the Dharmapuram and Thiruppanandal mutts, I have had the benefit of referring to another manuscript in the possession of M. R. Ry. S. Sadasiva Mudaliar Avergal, of Shiyali. I am also obliged to this scholar and patron of letters for a note of the Saiva Siddhanta Philosophy printed herewith.

My worshipful felicitations and gratitude are due to His Holiness Sri La Sri Subrahmanya Desika Paramacharya Swamigal, the Adhina Karthar of the Dharmapuram mutt, Twenty-third in descent from Guru Jnanasambandhamurthi, for having graciously given me permission and facilities for publishing this work.

I am thankful to M. R. Ry. S. Anavaratavinayakam Pillai Avergal, M.A., L.T., of Tinnevelly for his foreword, to Messrs. C. K. Subrahmanya Mudaliar, B.A., of Coimbatore and K. Subrahmanya Pillai M.A., M.L., of Tinnevelly, K. Subrahmanya Ayyar of the S. M. Hindu High School, Shiyali and B.A. Bashyam Ayyangar, B.A., L.T., of Bhudur for their valuable suggestions and to M. R. Ry. S. Kannuswami Pillai Avergal, B.A., of Shiyali for his help in correcting the proofs and seeing the book through the press.

TUMKUR (BANGALORE).
14-10-1930.

P. M. SOMASUNDARAN.

# NOTES ON " SAIVA SIDDHANTA "

The Saiva Siddhanta school traces its origin from the very Vedas and Agamas, the two oldest sacred books of the Hindus. They are considered to be the revelations of God and are most authoritative. The greatest and the most ancient commentator of the Brahma Sutra, Nilakanta Sivacharyar, says that he sees no difference between the Vedas and Agamas and quotes profusely in his Bhashya Vedic texts to substantiate his interpretation in the light of Saiva Siddhanta philosophy. Again, Appayya Dikshita, Haradatta Sivacharya, Sivajnanamunivar all belonging to the Siddhanta school of thought have written elaborate treatises and one and all of them find mutual concordance and harmony between the Vedas and Agamas. The latter, the real source of Siddhanta philosophy, are considered to be the commentaries on the Vedas. They are also held as special revelations of the Saiva religion. They are divided into Karma and Jnana Kanda, of which the latter deals most elaborately and exhaustively with the details of the Saiva Siddhanta philosophy. Besides, glimpses of this philosophy can be found even in Puranas and Itihasas told in the form of stories and anecdotes easily understood by all.

These scriptures are all in Sanskrit and an equally good stock of sacred writings commanding greater importance and sanctity abound in Tamil as well. Tevarams, the inspired hymns of the three great saints Appar, Sambandhar and Sundarar and the Tiruvachakam of Manikkavachakar are reckoned to be the Tamil Vedas, while the fourteen Siddhanta works are classed as Agamas. Just as Vedas serve to educate the generality of mankind with regard to the main doctrines of religion, so do the sacred hymns of the

canonized saints. Agamas, on the other hand, are exclusively philosophic in their teaching and expound the ultimate truths which are intended for the advanced section of those engaged in religious culture. Similar to this is the function of the fourteen Siddhanta works in Tamil.

## SAIVA SIDDHANTA.

This Saiva Siddhanta school, has like all other schools of thought, a cosmic evolution. If the Siddhanta lineage is understood properly, it will be found that this philosophy is as old as any other, if not older. It is said that at the very beginning after the grand dissolution *viz.*, Mahasamhara—the Vedas and Agamas came out from Pranava first in the form of Nada, then in that of Bindu, and then in that of Akshara. Words and phrases formed out of Aksharas that issued forth from the four side faces of Siva, came to be called the four Vedas and those that issued from the Urdhvamukha—the upward face, are known as the Agamas. Vedas were revealed to Brahma through Ananta Deva and the Agamas to the ten Maheswaras and eighteeen Rudras. Thus there came into existence twenty-eight Agamas. These were taught to Ananta Deva, who handed them down to Sri Kantha and who in his turn revealed them to Nandi Deva. When Nandi Deva had his doubts in understanding the Agamas, he requested Sri Kantha to clear them. Sri Kantha taught Nandi 'Sivagnanabodha' which is a section of the Raurava Agama. This Sivagnanabodha was taught by Nandi Deva to his disciple Sanatkumara, who to Satyajnana Darsani, who to Paranjyothi Muni and this Paranjyothi taught it to Meykanda.

Meykanda, translating Sivagnanabodha into twelve Tamil Sutras taught it to his first disciple Arulnandhi. This has been handed from Arulnandhi to Maraijnanasambandha

and from him to Umapatisivacharya. These teachers, from Meykanda Deva to Umapatisivacharya, are styled the "Santana Kuravars."

## SALIENT FEATURES.

Saiva Siddhanta postulates the existence of three ultimate entities or realities. These are Pati or God; Pasu or Soul; Pasam or the bondage of souls. These three are eternal and have neither beginning nor end. Pati or God is in its nature spiritual in form and is Almighty, All-merciful, Omnipresent, just and perfect and all love and ever blissful. He is beyond the approach of Pasam and He is the fountain-head of eternal happiness whence there is no return when once reached.

Souls are infinite in number. They are of crystal-like nature ready to reflect the object before which they are placed. They are also spiritual in form and are capable of enjoying the eternal happiness as recipients of the grace of God. But, they are enveloped in Pasam and hence subjected to pain and sorrow.

Pasam or the bondage of souls is divided into three kinds Anavam, Mayai, and Kanmam, which are known also as the three malas. Anavam makes the soul ignorant and arrogant and it is egoisim. Mayai is the source of material universe and capable of lifting man from his dormant and inert nature with the help of Pati. Kanmam is the accumlation of good and bad actions of souls and the cause of births and deaths of mankind. The bondage of souls by Pasam is an eternal condition but this bondage varies according to the different grades of souls. Thus souls with one mala are called Vijnanakalars, souls with two malas are known as Pralayakalars, and those with all the three Sakalars. Pasu and Pasam are so closely intimate that we cannot see the

one separately from the other. Yet their union is not indissoluble. Pasu or soul will be released from the bondage of Pasam by the grace of God and when the powers of Pasam are exhausted the Pasu or soul can clearly see God and be one with Him to enjoy the heavenly beatitude. Just as the soul had an inseparable union with Pasam in its original (Kevala) state so also it will have the same inseparable state with God after it is fully released from the bondage of Pasam. This relation is called 'Adwaitam' *viz.*, unity in duality.

## TATTVAS

Students aspiring to drink deep in the fountain of Saiva Siddhanta Philosophy must have a thorough knowledge of the tattvas. These are elaborately described and defined in Kattalais, small tracts, written in Tamil.

Most of the Indian schools of philosophy speak of the twenty-four atma tattvas, namely, the five elements: earth, water, fire, air and akasa; five jnanendriyas: ear, skin, eye, tongue and nose; five tanmatras: hearing (sound,) touch, seeing (sight) taste and smell; five Karmendriyas vak, pada, pani, payu and upastham; the four Antahkaranas: manas, buddhi, chittam and ahankara or twenty-five with Mulaprakriti, one of the Vidyatattvas. But the Saiva Siddhanta school postulates eleven more Tattvas over and above these twenty-five Purushatattvas and they are the other six Vidyatattvas; Ragam, Kalam, Niyati, Kalai, Vidya, Asuddamayai; and five sivatattvas: Sudda Vidya, Iswaram, Sadakkyam, Bindu (Shakti) and Nada (Sivam.) From Suddavidya to Nada are known as "Suddha Maya" from which have sprung up the four vacs—Sukshama, Paisanti, Madhyama and Vaikari. Thus, these 36 Tattvas beginning from Prithvi (Earth) to Nada are called Tattvadhva. Besides this, there are five more, namely, Bhuvanadhva embracing the vast region of Kalagnibhuvanam to

Anasritabhuvanam, Varnadhva, comprising of 51 Aksharas beginning from the letter अ Padadhva treating about 81 Padas commencing from Uyomamvyapi, Manthradhva, speaking of the eleven Mantras and Kaladhva, describing Panchakalas beginning from Nivartti. These and other intricate features of abiding interest to seekers after truth are well portrayed in Sivagnaswamigal's Siddhanta Prakasikai and Kasivasi Senthinatha Aiyar's Saiva-Siddhanta Tattva catechism.

Some of the main features of the Saiva Siddhanta, a knowledge of which may help in the clear understanding of Sivabhogasaram, are the following: Siddhanta means the true end of the Vedas and Agamas. The essence of the Vedagamas is the nature of the Pati, Pasu and Pasam; five malas: Anava, Tirothana, Maya, Suddhamaya, and Asuddhamaya; the development of the suddha maya, asuddhamaya and prakritimaya; Karma and its sub-divisions, sanchita, prarabdha, agamya; the functions of the ninety-six tattvas; the six adhvas; five kalas; six adharas; three mandalas; three main avastas and their fifteen sub-divisions; four margas namely, dasamarga, putramarga, sahamarga and sanmarga; the four steps of charya, kriya, yoga and jnana; the secret of the five letters; the fivefold suddhi; the four parts of Saktinipata; different classes of diksha and the dasa-karyam the most important of which is Sivabhoga. The Sivabhoga is the subject matter of this book.

Judged in the light of the above observations, a work on the most sacred and vital theme such as 'Sivabhogasaram' is undoubtedly a distinct welcome to the world of Saiva Siddhanta Mysticism. The talented author has unlocked the vast treasures of eternal happiness in the realisation of the Supreme and has placed his readers under a deep debt of grati-

tude to him for having served as a beacon light to the sweet realms of Saiva Siddhanta Philosophy. In these days when vernacular literature is much neglected, a genuine attempt at rendering such an important work as this in English is not out of place. It is earnestly hoped that the learned public would dive deep into the fountain of Saiva Siddhanta philosophy with the happy translation of Siva Boga Saram herein, by M. R. Ry. P. M. Somasundaram Pillai, Avl., M.A., L.T. and enjoy communion with the Supreme in a boundless measure. If ventures of this kind are encouraged in that spirit, the learned translator will not have laboured in vain.

Shiyali,
23-4-31.

S. SADASIVA MUDALIAR.

உ

திருச்சிற்றம்பலம்

## சற்குரு வணக்கம்

கிடந்தாலு ஞானப்பிர காசனென் பேன்கிடந் தேயெழுந்து
படர்ந்தாலு ஞானப்பிர காசனென் பேன்பசி யோடுபிணி
யடர்ந்தாலு ஞானப்பிர காசனென் பேனந்த வந்தகனார்
தொடர்ந்தாலு ஞானப்பிர காசனென் பேன்பினைச் சொல்லில்லையே()

வான்பார் கமலைத் திருஞான சம்பந்த மன்னனெங்கோ
ஊன்பா ருடற்பவ நீக்கிட வோமொழி யோர் வசனந்
தேன்பாகு கற்கண் டிளநீர் வளைமுறி சீனிகன்ன
லான்பா லினுந்தித்திக் தூற்றாய்ப் பெருக லதிசயமே. (2)

---

### STANZAS FROM "MUKTI NISCHAYAM."

I call out Jnanaprakas when I lay me down:
I call out Jnanaprakas when I rise and move about
I call out Jnanaprakas alike when I suffer from hunger and sickness
So also will I call out Jnanaprakas when the pangs of death are on me
Beyond that, there is no other word. (1)

Thiru Jnanasambandha, our King who liveth in Kamalai
Famed for its glory as far high as Heaven !
Is it too much for you to free me from this worldly existence ?
May a word from thy holy lips flow like a spring in my heart,
With melody far sweeter than honey, jam or crystal sugar,
The water of the green cocoanut, the juice of the chalice and the milk of the cow ?
That shall indeed be a romance in my life,
A mystery not yet experienced. (2)

அறியாமை நிற்கு மதிதத்தி லேசென் றறிவொடுநா
னறியாமை தோன்றநின் றேணின் றளவி லவிழ்ந்து நிற்க
வறியாமை யிற்பெறு பேறிழந் தேணினி யாகினுநா
னறியாமை தீர வருள்ஞான சம்பந்த வாரமுதே. (3

கருணாக ரன்புக ழாகர னெங்கள் கமலையில்வாழ்
திருஞான சம்பந்த தேசிகன் சொற்படி சென்றுநிற்க
வொருநா ணிகழ்ந்தது சொல்லவற் றேநின் றுயிர்ப்பறே
தருகாய மின்றியொ ராநந்த மெங்குந் தலைப்பட்டதே. (4

---

Having attained the stage that transcends finite
Knowledge I stood lost in mystic thought displaying
My ignorance, when, Lo! loosened from its tie
It disappeared and true light shone in me.
O Teacher of wisdom pure! Give me the higher
Knowledge and this very instant cast away the
Sins that cloud me with ruin and despair. (3

My life was moulded on lines shown and taught by Him
Who is an ocean of Grace and Fame, who lives in Kamala
Crowned in Divine Glory, whom all adore as Jnanasam-
Bandha. Shall I speak out an incident that happened
But once in my life? My senses failed, my body was
Reduced to naught and breath departed therefrom;
And I found myself wrapped in raptures pure. (4)

The Sacred Hall of Wisdom.

*Blessed be the Sacred feet of*
*Sri Guru Jnanasambandhamurthi.*

---

இச் செய்யுள்கள் இந்நூலாசிரியரியற்றிய "முத்தி நிச்சயம்" என்னும் நூலிலுள்ளன.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீன மடாலய
ஸ்தாபகராகிய

## ஸ்ரீமத் குருஞானசம்பந்த தேசிகர்

# சரித்திரசார சங்கிரகம்.

---

### குருபரம்பரை வாழ்த்து.

கயிலாய பரம்பரையிற் சிவஞான சித்திநெறி
காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றருமை வாழ்ஞான சம்பந்தக்
குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ.

நன்னா ருடன்செயும் பாமாலை சூடுநன் னாவலரைப்
பன்னாத பேரின்ப வீடாளச் செய்யும் பதாம்புயனே
யென்னாக மாவி பொருண்மூன்று மேற்றெனக் கின்பருள்வாய்
தென்னா தருமைச் சிவஞான சம்பந்த தேசிகனே !

### நூல்

மூவுலகினுந் தேவுலகமாய் விளங்காநின்ற இப்பூவுலகின் கண்ணே, மிகச் சிறப்புற்றோங்கிய நவகண்டங்களினுள்ளுந் தவகண்டமாகிய பரதகண்டத்திலே, சிவபூமியாய் விளங்கி யோங்குஞ் செந்தமிழ்நாட்டிலே, தென்னாடாகிய பாண்டிவளநாட்டின்கண் சிறந்த நிலவளமும் நீர்வளமும் பொருந்திய ஸ்ரீவில்லிபுத்தூரின்கண்ணே, சுமார் நானூறு

வருடங்களுக்கு முன்னமே, சிறப்புற்ற கார்காத்த சைவவேளாளர் குலத்திலே, சிவநேசச் செல்வமிகுந்த சுப்பிரமணியபிள்ளை யென்பவர் செய்த சிவபூஜாபுண்ணியபலமேலீட்டினாலே அவர் மனைவியாராகிய கற்பிற் சிறந்த மீனாக்ஷியம்மையாரிடத்திலே, கருணாநிதியாகிய ஸ்ரீ சிவபெருமான் இத் தமிழ்நாட்டின்கண்ணே, மாயாவாதம் சமவாதம் முதலிய புறமதங்கள் தலையெடுத்துத் தம் சைவசமயத்தையும் தம்மடியார்களையும் நிந்தித்துப் பலவிதமான இடையூறு செய்துவருதல் மிகுதலில், வேதாகமப் பிரமாணங்களாற் கண்டித்துச் சைவசமய ஸ்தாபனமுஞ் சிவஞானோபதேசமுஞ் செய்தருளிச் சிவனடியார்களை யாண்டருளத் திருவுளங்கொண்டு, திருவருளே திருமேனியா யுற்று மங்கள சுபமுகூர்த்தங்கள் நிறைந்த சோமவாரதினத்திலே, திருவவதாரஞ் செய்தருளி மூன்றாம் பாலமதிபோல் ஒவ்வொருநாளுந் திருமேனியுஞ் சிவஞானமும் மேன்மேலும் வளர வளர்ந்துவந்த காரணத்தால், தாய் தந்தையர்கள் களிப்புற்று ஞானசம்பந்தன் என்னுந் திருநாமமிட்டழைக்கப்பெற்றுப் பன்னிரண்டியாண்டுக்குள் தென்மொழி வடமொழிக ளிரண்டிலு மிக வல்லராய், ஆகம சாஸ்திரங்களெல்லாம் தமது குலகுருமுகமாய் விரைவில் அறியுணர்ந்து, சிவஞானச் செல்வராய் விளங்கித், தமது தாய் தந்தையர்கள் கண்டு களித்து ஆனந்தவாரிதியில் மூழ்கி மகிழும்வண்ணம் வாழ்ந்துகொண்டிருந்தாராயினார்.

இவ்வாறிருந்து வருங்காலத்தில், ஒருநாள் ஞானசம்பந்தருடைய தாய்தந்தையர்கள், தங்களுடைய ஆத்மார்த்தமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுளைத் தரிசிக்க விரும்பி, மதுரைக்குப் புறப்படுங் காலையில், தமது அருமைப் புதல்வராகிய ஞானசம்பந்தரையுங் கூடவழைத்துக்கொண்டுபோய்ச் சோமசுந்தரக் கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையுந் தரிசித்

துக்கொண்டு சிலநா ளங்கேயே தங்கியிருந்து, தங்களூருக்குத் திரும்புகையிற் றம்புதல்வராகிய ஞானசம்பந்தரையு மழைக்க, அவர் அத் தாய்தந்தையர்களைப் பார்த்து, 'என் தாய்தந்தையர்க ளிவ்வாலயத்தின்கண்ணே யிருக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து பொய்யா யழிந்தொழியும் உங்களுடன் வரேன்.' என்று பலசாஸ்திரவாயிலாகச் சமாதானஞ் சொல்ல, அவர்கள் ஒருவாறு மனமகிழ்ந்து, மதுரையிலேயே அவ்விஷ்டம்போ லிருக்குமாறு விட்டுப்போயினர்.

பின்பு ஞானசம்பந்தர் தினந்தோறும் பொற்றாமரைத் தடாகத்தில் ஸ்நாநானுஷ்டானங்களாகிய நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு, ஆறுகாலமுஞ் சோமசுந்தரக்கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையும் தரிசித்து வணங்கித் துதித்துப் பல நாள் வசித்துக்கொண்டு வருகையில், அன்பு மேலீட்டினாலே சோமசுந்தரக்கடவுள்மீது 'சொக்கநாதவெண்பா' என்னும் ஒரு பாமாலை பாடிச் சாத்தி, இன்னருள்பெற் றிருந்து வரு நாளில், ஒருநாள் பொற்றாமரைத் தடாகக்கரையிற் சில சிவனடியார்கள் நெருங்கியிருந்து சிவபூசைசெய்து ஆனந்தக் கண்ணீர்விட்டுத் தோத்திரஞ்செய்தலைக் கண்ணுற்றுத் தாமும் அவ்வாறு சிவபூசைசெய் தானந்தமுற விரும்பிச் சோமசுந்தரக்கடவுள் முன்னிலையிற் சென்று நின்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டவண்ணமே, தம்மிருக்கை சேர்ந்து அன்றிரவில் நித்திரைசெய்ய, கனவின்கண் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளிவந்து காட்சிகொடுத்தருளி, 'ஞானசம்பந்தா! நாம் சிவலிங்க ரூபமாகப் பொற்றாமரைத்தடாகத்தின் ஈசானமூலையில் கங்கைக்குள் ளிருக்கின்றோம். காலையிலங்குச் சென்று மூழ்கி யெடுத்து உன்னிஷ்டப்படி பூசிப்பாயாக!' என்று கட்டளையிட்டுத் திருவுருமறைந்தருளலுந் திடுக்கிட்டெழுந்து விழித் ததிசயமுற்று, ஆனந்தக்கூத்தாடித்

தோத்திரித்த வண்ணமே, அதிகாலையில் பொற்றாமரைத் தீர்த்தத்திற் சென்று கட்டளைப்பிரகாரம் மூழ்கிப் பார்க்குங் கால், தானே பெட்டகக் கோயிலோடுந் தங்கையில்வந்தெழுந் தருளிய சிவலிங்கத்தை யெடுத்துப் பூசித்து, ஆனந்தக்கூத் தாடிக்கொண்டு சந்நிதானத்திற் சென்று, சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வணங்கி,

கண்ணுக் கினிய பொருளாகி யேயென் கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடு மற்புத மேயென்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட வென்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே.

என்னும் சொக்கநாதக் கலித்துறையைப் பாடி, 'அடியேன் விரும்பியவண்ணங் கிருபைசெய்தருளினீர்; இனி, இச்சிவ லிங்கத்தைப் பூசித்தற்கேதுவாகிய சிவஞானோபதேச முஞ் செய்தருளுஞ் சிவாசாரியரையும் அனுக்கிரகித் தருள வேண்டும்' என்று பிரார்த்தித்து விடைபெற்றுக்கொண்டு, தம்மிருக்கையிற் சார்ந்து அன்றிரவில் நித்திரைசெய்கையில், முன்போல் சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளிவந்து காட்சி கொடுத்தருளி, 'ஞானசம்பந்தா! திருவாரூரின்கண் சென்று நமதுபதேச சாம்பிரதாய பரம்பரையில் வந்த ஞானப்பிரகாச தேசிகனிடத்தில் ஞானோபதேசம் பெற்று, நம்மைப் பூசித்து வாழ்வாயாக!' என்று கட்டளை யிட்டருளி மறைந்து, திருவாரூரில் ஞானப்பிரகாச தேசிகரிடத்திற் சென்று, கன விற்றோன்றி, 'ஞானப்பிரகாசனே! வருகிற சோமவாரத் தன்று உன்னிடம் வருகிற நமது ஞானசம்பந்தனுக்கு விதிப் படி சிவஞானோபதேசஞ் செய்து, சிவலிங்கபூசையும் எழுந் தருளப்பண்ணிவைப்பாயாக!' என்று கட்டளையிட்டு மறைந் தருளினார்.

உடனே ஞானப்பிரகாசதேசிகர் சோமசுந்தரக்கடவுள் தம்மேற் கருணைகூர்ந்து எழுந்தருளிவந்து கனவிற் கட்டளை யிட்டருளியதைச் சிரமேற்கொண்டு வணங்கித் திடுக்கிட்டெழுந்து மெய்சிலிர்த் தானந்தக்கண்ணீர்பொழியத் தோத்திரித்துவணங்கி, கட்டளையிட்டருளிய சோமவாரதினத்தை எதிர்பார்த்திருந்தனர்.

அச்சோமவார தினத்தில் அதிகாலை யிலெழுந்து கமலாலயத்தில் ஸ்நானஞ்செய்து, நித்திய கர்மானுஷ்டான சிவபூஜாதிகளை முடித்துக்கொண்டு, சிவாலயத்திற் சென்று, தியாகராஜப்பெருமானைத் தரிசித்து, சித்திச்சரத்திலுள்ள தமதுபாசனுமூர்த்தியாகிய ஸ்ரீ தக்ஷிணமூர்த்திபகவானுக்கு, விசேஷ அபிஷேக நைவேத்திய தீபாராதனைகளுஞ் செய்வித்து, அச் சந்நிதானத்திற் கிழக்கு முகமாய் வீற்றிருந்து, ஞானசம்பந்தர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இவர் இவ்வாறிருக்க :

மதுரைமாநகரத்தில் ஞானசம்பந்தர் தமக்குக் கனவின்கண் சோமசுந்தரக்கடவுள் கட்டளையிட்டருளியதைக் கேட்டுத் திடுக்கென நித்திரைவிட் டெழுந்து, மெய்சிலிர்த்து, ஆனந்தபாஷ்பம் பொழியத் தோத்திரித்து வணங்கி, அதிகாலையி லெழுந்து, சிவாலயத்திற்சென்று, பொற்றாமரைத் தடாகத்தின்மூழ்கி, நித்திய கர்மானுஷ்டானம் சிவபூஜாதிகளை முடித்துக்கொண்டு, சோமசுந்தரக்கடவுளையும், மீனாக்ஷியம்மையாரையுந் தரிசித்துவணங்கிப் புறவிடைபெற்று, அங்கு நின்றும் புறப்பட்டுமத்தியிலுள்ள திருவானைக்கா முதலிய சிவஸ்தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு அச் சோமவார தினத்தில் அதிகாலையிற் றிருவாரூரை யடைந்து, கமலாலய தீர்த்தத்தில் மூழ்கி, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சிவாலயத்திற்புகுந்து, பிரதக்ஷண நமஸ்காரஞ்

செய்து, விநாயகரைத் தரிசித்து வணங்கிச் சந்நிதானத்திற் புகுங்காற் றம்மை யறியாமல் ஆனந்தக் கண்ணீர் சொரிய, மெய்சிலிர்க்க, நாத்தழுதழுக்க, நடை தள்ளாடச் சென்று, திருமூலட்டானேசுரரையும், தியாகராஜப் பெருமானையும் வணங்கித் துதித்து, நீலோத்பலாம்பிகையையும் தரிசித்து வணங்கிக் குருநாதன் றரிசனம் எப்போது கிடைக்குமோ வென்று நினைத்து விரைவாய்ப் பிரதக்ஷணம் வருகையில் எதிரே யுள்ள சித்திச்சரத்தின்கண் தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில் அத் தக்ஷிணாமூர்த்திபகவானே தம்மையாண்டருள வேண்டுமென்னும் பெருங் கருணையினாலே, மானிட வுருக்கொண்டு, எழுந்தருளியிருக்கின்றாரென் றறிவுறக் கிழக்கு முகமாய்ப் பெருங்கருணையோடும் ஈனமல விருணீக்கி யருளும் ஞானபானுவே யென வீற்றிராநின்ற குருமூர்த்தி யாகிய ஞானப்பிரகாசதேசிகரைக் கண்டவுடன் தம்மிறைவன் உணர்த்தியருளிய ஞானப்பிரகாச தேசிக ரிவரே யென்று தெளிந்து காந்தங்கண்ட இரும்பேபோல் விரைவிற்சென்று, திருவடிகளில் வீழ்ந்து, ஆனந்தபரவசராயினார்.

அஃதுணர்ந்த ஞானப்பிரகாச தேசிகர் மிகுந்தபேரன்போடும் ஞானசம்பந்தரைத் தம்மிருகரங்களால் எடுத்துச்சிமோந்து சயித்தியோபசாரஞ்செய்து, 'ஞானசம்பந்தா' என்று தட்டியெழுப்பிப் 'பயப்படாதே' யென்று அபயங்கொடுத்து, சந்நிதானத்தில் வடக்குமுகமா யுட்காரவைத்து, திருவருணோக்கத்தால் ஞான தீக்ஷை செய்து, மெய்யாதி முப்பொருளுங்கொண்டு ஐயாதி முப்பொருளும்விண்டு, (பதி பசு பாசம்) அவர் சிரமேற் றிருவடிக்கமலஞ்சூட்டி, முத்தி பஞ்சாக்ஷரத்தாற் சிவஞானோபதேசமுஞ் செய்து, சிவத்தோ டைக்கியமாம்அத்துவிதாநந்த நிலயமாகிய நித்தியானந்த

வீடருளிச் சொக்கலிங்கத்தை யெழுந்தருளப்பண்ணித் திருக்கரத்திற் கொடுத்தருளினார்.

உடனே அச் சொக்கலிங்கத்தினை ஞான பூஜாவிதிப்படிப் பூசித்து, தாம் சோக்கநாதக் கலித்துறையைப் பாடித் துதித்துப் பிரார்த்தித்து, தம் குருநாதனாகிய ஞானப்பிரகாச தேசிகரை அருவுமுருவுமருவுருவமில்லா ஆண்டான் என்னும் வெண்பாக்களாற் பலவாறு தோத்திரித்துக்கொண்டு, திருவடிகளில் வீழ்ந்து, பேரானந்தக்கண்ணீராட்டிப் பூசித்து நிற்க, ஞானப்பிரகாசதேசிகர் புன்னகைபுரிந்து திருவருளோடுஞ் சிவபிரான் திருநந்திதேவருக்குத் திருவாய்மலர்ந்தருளிய சிவஞானபோத மாபாடியமாகிய சிவஞான சித்தியாரை யையந்திரிபற உணர்த்தியருளினார்.

இவ்வாறு திருவாரூரில் ஞானப்பிரகாச தேசிகரிடத்து, ஞானோபதேசம் பெற்றருளிய ஞானசம்பந்தர், சொக்கலிங்கமூர்த்தியை ஞானபூஜாவிதிப்படிப் பூசித்து, சிவஞானசித்தியைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடிப் பலநாள் குருக்ஷேத்திர வாசஞ்செய்துகொண்டு, குருபணிவிடையை நிழல்போற் பிரியா தியற்றிக்கொண்டு வருநாளில், ஒருநாள் தம்மைப்போன்ற பல சீடர்கள் சூழக் குருமூர்த்தியோடு கோயிலுக்குப் போய் அர்த்தசாம தரிசனஞ்செய்து திரும்பிவருகையிற் கைவிளக்குப் பணிவிடைக்காரன் றூங்கிவிட்டமையால் ஞானசம்பந்தர் தாமே விரைவிற் சென்று கைவிளக்கை யெடுத்துக்கொண்டு, இன்று இப்பணிவிடை நமக்குக் கிடைத்ததே யென்று பெருமகிழ்ச்சியாய்க் குருநாதனுக்கு முன்செல்ல, மடத்துக்குள் ஞானப்பிரகாச தேசிகர்புகுங்கால், ஞானசம்பந்தரை நிற்க வென்று கட்டளையிட்டருளிச் சென்று, போஜன முதலியனவுஞ் செய்து நித்திரை செய்தருளினார்.

ஞானசம்பந்தரும் அக் குருமூர்த்தியின் வாக்கின் பிரகாரம் கைவிளக்கைப் பிடித்தவண்ணமே தமக்குபதேசித்தருளிய சிவஞானோபதேச நிலையிலேயே விடியும்வரையும் நின்றருளினார். திருவருளினாலன்றிரவு பெய்த விடாமழைகள் அவர் திருமேனியில் விழாது, ஒரு கஜ தூரம்வரையும் சுற்றிலும் கோடுகட்டினதுபோல், கீழ்ப்பூமியிலும் சலம்புகாமல் நின்றன. இவ்வாறிருந்ததை விடியற்காலத்திற் சாணந் தெளிக்கவந்த பெண்கள் கண்டு, மனம் அதிசயித்து உள்ளே திரும்பியோடி ஞானப்பிரகாசதேசிகருக்குத் தெரிவிக்க, அவர் உடனே திடுக்கிட்டெழுந்து ஓடிவந்து பார்த்துத் திருவருளின் மகிமையைச் சிந்தித்து, ஆனந்தக்கண்ணீர்சோர, 'எனது குருஞானசம்பந்தா' வென்று கூப்பிட்டுக்கொண்டு, சமீபத்திற் சென்று, தமதிருகரங்களாலும் ஞானசம்பந்த தேசிகரை யிறுகப் புல்லிக்கொண்டு, அப்பனே 'நீர் நாமும் வணங்குங் குருராயராகிவிட்டீர்' என்று பேரன்போடு முரைத்து, 'இனி நீர் இஷ்டப் பிரகாரம் வேண்டிய விடத்திற் சென்றிருந்துகொண்டு, உம்மை வந்தடைந்த பக்குவர்களுக்குச் சிவஞானோபதேசஞ் செய்து பாதுகாத்து, மடாதிபதியாக வாழக்கடவீர்' என்று கட்டளையிட்டருள, ஞானசம்பந்த தேசிகர் இடியினைக் கேட்ட நாகம்போலத் திடுக்கிட்டுக் கீழே விழுந்துபுரண்டு அழுது, 'அடியே னெவ்வாறு தேவரீரை விட்டுப் பிரிந்திருப்பேன்' என்று பலவாறு புலம்பிக்கொண்டு நின்று 'அடியேனுக்குஞ் சுதந்தரமுண்டோ?' என்று சொல்லி,

கனக்கும் பொதிக்கு மெருதுக்குந் தன்னிச்சை கண்டதுண்டோ
வெனக்கு முடற்கு மெனதிச்சை யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுண் ஞானப்ர காச சிதம்பரவின்
றனக்கிச்சை யெப்படி யப்படி யாக வுரைத்தருளே.

என்னுங் கட்டளைக்கலித்துறையாற் றம்முடைய கருத்தைத் தெரிவிக்கக் கேட்டருளிய ஞானப்பிரகாச தேசிகர், பேரன் போடு மனமகிழ்ந்து 'ஞானசம்பந்தரே! நமதூருக்கு வடக்கே இரண்டு யோசனை தூரத்துக்கப்பாலுள்ள மாயூரத்துக்குக் கிழக்குத் திக்கில் ஒரு குரோச தூரத்துக்குள், எமதருமராஜ னாற் பூசிக்கப்பெற்று, அகஸ்திய முனிவர் முதலிய மகான் களாற் றரிசித்து வணங்கப்பெற்ற வில்வாரண்யமாகிய திருமபுரத்திற் சென்று வசித்து, உமது பக்கல் வந்தடைந்த பக்குவிகளுக்கு ஞானோபதேசஞ் செய்து போலி யாகிய புறமதங்களை வேதகாம முதலிய பாசுபதாஸ்திரங்களால் வென்று, சைவசமய ஸ்தாபனஞ்செய்து, சைவசித்தாந்த சமரச சன்மார்க்க சமயபரிபாலன பீடாதிபதியாய் வாழக் கடவாய்!' என்று கட்டளையிட் டருளியபடியே, புறவிடை பெற்றுக்கொண்டு பிரிவாற்றாராய்ப் புறங்காட்டாது, கோபு ரத்தைத் தரிசித்த வண்ணம் குருமூர்த்திமேற் பேரன் போடும், ஆனந்தக் கண்ணீர் சொரிய ஞானப்ரகாச மாலை யைப் பாடிக்கொண்டு சென்று, கோபுர மறைந்தபிறகு திரும்பி, மத்தியிலுள்ள ஸ்ரீவாஞ்சிய முதலிய சிவஸ்தலங்களை யெல்லாந் தரிசித்து வணங்கிக்கொண்டு, மாயூரத்தை யடைந்து, காவேரியில் ஸ்நானஞ் செய்து நித்யகர்மானுஷ் டான முதலியவைகளை முடித்துக்கொண்டு, சிவாலயத்துட் சென்று, மாயூரநாதரையும் அஞ்சனாயகியையும் தரிசித்து வணங்கி விடைபெற்றுக் கிழக்குத் திக்கிலுள்ள தரும புரத்தை யடைந்து, தருமபுரீஸ்வரரையும் அபயாம்பிகையை யும் தரிசித்து வணங்கி, அக் கோவிலின் மேற்புறத்திலுள்ள வில்வாரண்ணியத்தில் ஓராசிரமத்துள் வசித்து, சொக்கலிங் கப் பெருமானைப் பூசித்துக்கொண்டு, தம்மை யடைந்த பக்குவர்களுக்கு ஞானதீக்கை புரிந்து ஞானோபதேசஞ்

செய்து, சிவஞான சித்தியாரை ஐயந்திரிபற வுணர்த்தி, கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் முதலியவைகளால் ஞானயாகஞ் செய்து, ஓரறிவுயிராகிய தாபரமுதல் ஆறறிவுயிராகிய தேவரீறாய சகல உயிர்களுக்குஞ் சுத்தாத்வைத சைவசித்தாந்த சமரசசன்மார்க்க நிலையினை யுபதேசித்து நித்தியானந்த முத்தியை யீந்தருளிப் பாதுகாத்து, குருராய தேசிகமணியாய் மெய்கண்டசந்தான தேசிக பீடாதிபதியாய் எழுந்தருளியிருந்து, சிவபோகசாரம், முத்திநிச்சயம், பேரானந்தசித்தியார் முதலிய உண்மை நூல்களாகிய ஞானசாத்திரங்களையும், அநேக தோத்திரங்களையுஞ் செய்தருளி, அநேக அற்புதங்களால் திருவருளை விளக்கிக் கொண்டு, ஜெகத்குருவாய் விளங்கி அநேகவருடகாலம் எழுந்தருளியிருந்தனர்.

அவ்வாறிருக்கையில், அத் தருமபுரத்திலுள்ள தருமபுரீசுரருக்கு, நித்திய நைமித்திய முதலியவைகளை நடாத்திக் கொண்டு வந்த அகஸ்தியருடைய மாணாக்கர்களாகிய முனீந்திரர்கள் இஞ் ஞானசம்பந்ததேசிகரது பிரபாவ முதலியவைகளைக் கண்ணுற்றுப் பேரானந்த முற்றவர்களாய்த் தங்களுடைய ஆசிரமங்களையும் சிவாலயத்தையும், அவரிடம் ஒப்புவித்து, அவைகளைப் பரிபாலித்து வரத்தகுந்த இரசவாத முதலிய பலசித்திகளையும் உபதேசித்து, 'எங்களைப்போல் மேற்கூறிய ஆச்சிரமத்தையும், சிவாலயத்தையும், பாதுகாத்து, நீரும் உமக்குப் பின்வரும் சந்ததியாரும் பரம்பரையாய்ப் பரிபாலித்து வரக்கடவீர்கள்' என்று ஆசிர்வதித்து, தங்களுடைய ஸ்தானமாகிய திருக்கயிலாயத்தை யடைந்தருளினார்கள்.

அதன் பிறகு ஞானசம்பந்ததேசிகர் சிவாலயத்தையும் சிவனடியார்களாகிய திருக் கூட்டங்களையும், தமது பெருங்

கருணையினாற் பாதுகாத்துக்கொண்டு, ஒருவரையும் எதிர் பாராது சிவாலயத்திருப்பணி மகோற்சவம் முதலியவைகளை நடாத்திக்கொண்டு வருகையில், தமக்குச் சமீபத்தில் பரி பூரணதசை வருதலைத் திருவருளுணர்த்த வுணர்ந்து, சிவா லயத்துக்கு மேற்கே, திருக்கோயில்கட்டிச் சிவலிங்கப் பிர திட்டைசெய்து, அச்சிவலிங்கப் பெருமான் றிருவடி நீழலிற் சமாதிகூடத் திருவுளங் கொண்டு, தமதடியார்களில் அதி தீவிர பக்குவராகிய ஆநந்தபரவசருக்கு ஞானோபதேசஞ் செய்து, தமது பீடாதிபத்தியத்தையும் சொக்கலிங்கத்தையுங் கொடுத்தருளி, 'இனி நீர் நமது பீடத்திலிருந்து கொண்டு, ஞானோபதேசஞ் செய்து, பக்குவர்களையுஞ் சொக்கலிங்கத் தையும் சிவாலயத்தையும் பரிபாலித்து வாழ்ந்துவரக்கட வீர்' என்று கட்டளையிட்டருளி, சிவசமாதி கூடியருள லும், ஆனந்தபரவசதேசிகர் அதிதீவிர பக்குவரானபடியால் சிவஞான மேலீட்டினால், ஆனந்த பாஷ்பம் பொழியச் சமாதி முன்னிலையில் வீழ்ந்து, நமஸ்கரித்து எழுந்து, ஞானா சாரியருடைய சமாதியின் மேற்புறத்திற் சென்று, குரு மூர்த்தியின் திருக்கோயிற் சிகரத்தைத் தரிசித்தவண்ணம் கிழக்கு முகமாயிருந்து, சமாதிகூடி மீளாச் சிவானந்தாத் வைத முத்திநிலை யெய்தியருளினார்.

அஃதுணர்ந்த திருக்கூட்டத்தார்களாகிய மெய்யடியார் கள், கவலையுற்றவர்களாய், பரிபூரணதசையை யடைந்த குருஞானசம்பந்தமூர்த்தி சந்நிதானத்தை யடைந்து, ஆனந்தபரவசதேசிகர் உடனே சமாதிகூடி முத்தியடைந்த நிலையினைத் தெரிவித்து, 'சுவாமிகள் மீளவும் எழுந்தருளி வந்து, வேறொருவரை நியமித்துப் பரம்பரைச் சம்பிரதாயத் தையும், அடியேங்களையும் இரக்ஷித்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளத் திருவுள்ளத்துத் திருவரு

ளாலுணர்ந்து, மீளவுஞ் சமாதியினின்று மெழுந்தருளிவந்து தம்மடியார்களில் மந்தபக்குவராகிய சச்சிதானந்தர் என்பவரைத் தெரிந்தெடுத்துத் தமது திருநோக்கத்தால் ஞானாபிஷேகஞ்செய்து, தமது பீடாதிபத்தியத்தையுஞ் சொக்கலிங்கத்தையுங் கொடுத்தருளியும், ஞானசமாதி கூடிவராமையால் அச் சச்சிதானந்த தேசிகரைத் திருவருணோக்கஞ் செய்து,

தானந்த மாதிநடு வில்லா தோங்குஞ்
சச்சிதா னந்தமயந் தானே யாய
வானந்த பரவசனைக் கண்டுங் கண்டு
மந்தந்தோ பாகத்தை யறிந்தி ரில்லை
மானந்தான் வடிவாகி நிற்ற லாலோ !
மலமாயை கன்மமிவை மடியா தாலோ ?
ஞானந்தா னுபதானத்தி லுதியா தாலோ ?
நாமறியோ முமதுமய னறிந்து வீரே.

என்ற திருவருட்பாடலைத் திருவாய் மலர்ந்தருளியும், சிவசமாதி நிலையினைக் கூடியுணர்ந்தனர். அதனுணர்ந்து மகிழ்ந்தருளிய குருஞானசம்பந்த தேசிகர் அச் சச்சிதானந்த தேசிகரைப் பார்த்து, 'இனி, நீர் நமது பீடாதிபதியாய் வீற்றிருந்து கொண்டு, சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்துத் திருக்கூட்டத்துள்ள அடியார்களை ரக்ஷித்து, பக்தர்களை விசுவாசித்துப் பாதுகாத்துப் பக்குவிகளுக்குச் சிவஞானோபதேசஞ்செய்து, நீடூழி வாழ்ந்திருக்கக் கடவீர்' என்று கட்டளையிட்டருளி, வைகாசிமாசம் அபரபக்க சப்தமி தினத்திலே, சிவசமாதிகூடிச் சிவானந்தாத்வைத பரிபூரணநிலையாகிய, தத்சொரூப சித்தியினை யெய்தியருளினர்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகர் சரித்திரசாரசங்கிரகம் முற்றிற்று.

ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகன் திருவடி வாழ்க.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவபோகசாரம்

# SIVA-BHOGA-SARAM

## THE ESSENCE OF BLISSFUL EXPERIENCE

——:o:——

### க. அடிகள் வணக்கம்.

சித்தி தருநாதன் றென்கமலை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
தருநாத னங்குருநா தன். (க)

---

### 1. SALUTATION TO THE GURU.

1. The Lord that giveth attainment
The Lord that liveth in the south Kamalai
The Lord that inspireth love
The Lord that is supreme
The Great Lord of Freedom, Jnanaprakas,
The Lord that revealeth truth
He is our master.

அருவு முருவு மருவுருவு மல்லா
வொருவ னுயிர்க்குயிரா யோங்கித்—திருவார்
கமலைவரு ஞானப்ர காசனென வந்தே
யமலபதந் தந்தெனையாண் டான். (௨)

ஆரறிவார் நீதிவழி யாரறிவார் சித்திமுத்தி
யாரறிவார் நற்றவங்க ளன்பனைத்தும்—பாரெவர்க்குங்
கத்தன் கமலையில்வாழ் ஞானப்ர காசனெனு
மத்தனென்போல் வந்திலனே னால். (௩)

---

2. The one that is neither the formless
Nor the form nor the formless form
Sprang as the life of all life and came
Hailing from holy Kamalai, Jnanaprakas,
He gave me His immaculate feet
And admitted me into His Grace.

3. Who could know the path of justice
Who could know Siddhi and Mukthi
Who could know the good austerities
And fullness of love,
If the Lord of all men on Earth
The Father, Jnanaprakas of Kamalai
Had not come in a form like mine ?

அரியயற்கு முன்னா ளடிமுடியுங் காணாப்
பெரியவனே வந்து பிறந்து—துரியம்
பெருக்கின்றான் ஞானப் பிரகாச னாகி
யிருக்கின்றா னாரூரி லின்று. (௪)

கண்டேனிப் பாசங் கழிந்தே னமுதைமுகந்
துண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன்—வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்ர காசனையே நான். (௫)

---

4. The Great One Himself whose crown and feet
Could not be seen by Aja and Hari
Hath come, hath been born. He increaseth Turiya
The estate of man, the highest serenest calm,
In Arur He hath his abode this day
As Jnanaprakas.

5. I saw Him. My bonds slipped off.
Nectar I scooped and drank.
I was in blissful ecstasy.
I saw Jnanaprakas, Him of Kamalai,
Whose gardens pour honey to the murmuring bees
Him with golden feet like lotus red.

உள்ளிருந்தே யென்று முணர்த்துகினுங் கண்டிலரென்
றுள்ளும் புறம்புமா வோமென்று—மெள்ள
நரருருவா யாரூரில் வந்தா னமையாண்
டருள்புரிஞா னப்பிரகா சன். (௬)

இருளுதய நீக்கு மிரவியைப்போ லென்று
ளருளுதய நன்கு யருளி—மருளுதய
மாற்றியவ னாரூரன் மாமறையு மாகமமுஞ்
சாற்றியஞா னப்பிரகா சன். (௭)

---

6. We dwell within and ever prompt them
Still they have not found us out ;
Now let us be within, without as well,
Thought Jnanaprakas.
And soft in human form He came
In Arur; into His Grace accepted us.

7. Like the sun that driveth the enshrouding darkness
With the dawn of His Grace, well bestowed in me
The appearance of ignorance He drove
He of Arur, that uttered the Vedas
And Agamas great, Jnanaprakas.

ஒழியாத பேரின்பத் துள்ளா யுலகில்
விழியா திருந்து விடவே—யழியாத
பூரணா செங்கமலப் பொற்பாதா தென்கமலை
யாரணா நாயேற் கருள். (௮)

தேடுந் திரவியமுஞ் சிற்றறிவும் பற்றுதலுங்
கூடும்பொய் யென்றருளிற் கூட்டினா—னாடரிய
ஞானப்ர காசனுயர் நற்கமலை மாநகர்வாழ்
வானப் பிறையணிந்த மன். (௯)

---

8. Merged in great unending joy
To remain unawakened to the world,
Thou Perfect One, Everlasting,
Thou with golden feet like lotus red,
Thou of Kamalai of the South
Lord of the Vedas, help Thou me,
Me as lowly as a dog.

9. The treasure that is sought,
The knowledge imperfect
The desire that clingeth
All these are lies, — In Grace
He made known to us, Jnanaprakas
That dwelleth in the great city,
Kamalai, noble and fair,
The King hard to approach,
Adorned with the crescent moon.

காண்பதும்பொய் கேட்பதும்பொய் காரியம்போ லேயிதமாய்ப்
பூண்பதும்பொ யெவ்விடத்தும் போகமும்பொய்--மாண்பாகத்
தோற்றியின்ப வெள்ளமாய்த் தன்னியென்னுட் சம்பந்தன்
வீற்றிருப்ப தொன்றுமே மெய். (௰)

## உ. பெறுதற்கருமை.

ஒருமையுட னீசனரு ளோங்கியென்றுந் தூங்க
லருமை யருமை யருமை—பெருமையிடும்
பாங்காரங் கோப மபிமான மாசையிவை
நீங்காத போதுதா னே. (கக)

---

10. Whatever be seen is lie, whatever be heard is lie,
Whatever be taken up as wholesome work is lie,
Whatever be enjoyed whithersoever is lie. But this,
That Sambandha cometh in sublimity,
Closeth as a flood of joy and hath His abode in me,
This alone is true.

## 2. THINGS HARD OF ACHIEVEMENT.

11. Hard, hard, hard it is to be lapped
In single-minded communion with the growing grace of God,
When conceit, cruelty, egotism, anger
Attachment and actions born of desire
When these are not eschewed.

தன்பெருமை யெண்ணாமை தற்போத மேயிறத்தன்
மின்பெருமை யாஞ்சகத்தை வேண்டாமை—தன்பா
லுடலைத் தினம்பழித்த லோங்குசிவத் தொன்ற
னடலைப் பிறப்பொழியு நாள். (கஉ)

உரையிறந்தா லுன்னு முணர்விறந்தான் மாயைத்
திரையிறந்தாற் காண்கின்ற தேவை—வரைபெருக
வாசிப் பதுநாவால் வாழ்த்துவது நாடகமாய்ப்
பூசிப்ப துஞ்சுத்தப் பொய். (கங)

---

12. Thinking not of one's own glory, losing self-conceit,
Discarding the world whose glory is that of the lightning flash, so fleeting,
Despising one's own body, day in, day out,
Holding holy communion with the exalted Lord—
The day when these do happen is the day
When painful birth doth cease.

13. It is wholly wide of the mark, feigning and farcical,
To read the sacred lore in ever-extending bounds,
To praise with tongue and worship God,—
The God who is only seen
When word hath ceased, and thought hath died
And the screen of Maya hath been torn asunder.

பரம ரகசியத்தைப் பாழான வாயா
லிரவுபக லெந்நேர மின்றிக்—குரலெரியக்
கூப்பிட்டுங் காணுமோ கோழைமட நெஞ்சேமால்
பூப்பிட்டுங் காணாப் பொருள். (௧௪)

ஒருகோடி யாகமங்க ளெல்லா முணர்ந்தும்
பெருகுதவஞ் சித்தியெல்லாம் பெற்றும்—குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்மாந் தினம். (௧௫)

---

**14.** Can it be found the Secret so supreme
Even though thou callest out, night and day,
Unceasingly, till thy voice cracketh hoarse–
O feeble foolish heart! — the Thing
That could not be found even though Vishnu did seek
Cleaving through the solid earth?

**15.** Even though they master a million scriptures
Practise stern austerities and powers mysterious gain,
To the men that cannot be steadfast
Where the Guru's grace hath placed them
There will be mental perturbations
Ever and aye.

அன்புமிக வுண்டா யதிலே விவேகமுண்டாய்த்
துன்பவினை யைத்துடைப்ப துண்டா-யின்பந்
தரும்பூ ரணத்துக்கே தாகமுண்டா யோடி
வருங்கா ரணர்க்குண்மை வை. (கசு)

## ௩. அறியும் பகுதி.

உருவை யருவை யொளியை வெளியை
யிருளைச் சிவமென் றிராதே—மருளைப்
பிறிந் * தறிவிற் கண்டதனைப் பின்னமற வெங்குஞ்
செறிந்தபொரு டானே சிவம். (கள)

---

16. Keep the truth apart for those
Whose love doth grow from more to more
Whose knowledge groweth from out that love
Who wipe out Karma, the cause of pain,
Who go running thirsting after
The Perfection that yieldeth Joy.

### 3. THINGS TO BE KNOWN

17. Mistake thou not as Sivam anything
That hath form or that is formless
Or light or space or darkness.
That thing is Sivam Which filleth
Indistinguishably, through and through,
That which hath been realised
In knowledge when purged of ignorance.

---

